கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.332/2015 வா.சா.1 சேகர்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 07.08.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) வழக்கு கோவில்கள் சுமார் 150 ஆண்டுகள் பழமையானது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் 6 தாள்கள் கொண்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஓ.ஏ.42/1955 உத்தரவின் தமிழ் மற்றும் ஆங்கில பிரதிகள் உள்ளன என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 3 பக்க ஆங்கில மனுவில் ஓ.ஏ எண்ணோ, கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் கையால் எழுதப்பட்ட மனுவில் முத்திரையோ கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் உடுமலை கோர்ட் என்று எழுதப்பட்ட தாள் அரைபக்கமே உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்திலுள்ள 6 தாள்களும் வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ.7 அழைப்பிதழில் " நம் குலத் தோன்றல்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு அம்மன் அருள்பெற வேண்டுகிறோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அழைப்பிதழில் குலம் என குறிப்பிடப்பட்டுள்ளது அகமுடையார் முக்குந்தர் குலம் என்றால் சரிதான்.

3) சுப்பையதேவர் 17.02.1975 ல் இறந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 சான்று யாரால் பெறப்பட்டது என குறிப்பு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணம் சுப்பையதேவர் இறந்து 40 ஆண்டுகள் கழித்து 2015 ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் வாதியாகிய நான் கோவிலை நிர்வகித்து வருவதாக குறிப்பிடப்படவில்லை

என்றால் சரிதான். வா.சா.ஆ.10 சான்று வழங்கிய கிராம நிர்வாக அலுவலர் பெயர் என்ன என்றால் தெரியவில்லை.

4) ஒரு கோவிலை நிர்வகிக்க இந்து அறநிலையத்துறை ஆணையர் அனுமதியின்பேரில்தான் நிர்வகிக்க முடியும் என்றால் சரியல்ல. அது தனியார் கோவிலுக்குப் பொருந்தாது. வா.சா.ஆ.10 ஆவணம் என் வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. வழக்கு கோவிலை நிர்வாகம் செய்வதாக குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்ய நான் தடைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனை ஒட்டி நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர நான் தடைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.1 ஆவணம் ராமசாமித் தேவரும் சுப்பையதேவரும் எழுதிக்கொண்ட பாகசாசனம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சி ஷெட்யூல் சொத்து க.ச.எண்.158 புஞ்சை ஏக்கர் 9.50 என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் E ஷெட்யூலில் வழக்குச் சொத்து கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

6) கடந்த 03.04.1982 ல் சுப்பையதேவரும் அவரது மக்கள் கன்னிமுத்து தேவரும் சண்முகத்தேவரும், காமாட்சி தேவரும் வழக்கு சொத்து பொருத்து பாகப்பிரிவினை பதிவு செய்து கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் கன்னிமுத்து தேவருக்கு 3.25 ஏக்கரும், சண்முகத் தேவருக்கு 3.00 ஏக்கரும், காமாட்சி தேவருக்கு 3.25 ஏக்கரும் என பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணம்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். (**03.04.1982 தேதியிட்ட பாகப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**) பி.வா.சா.ஆ.1

ஆவணத்தில் வழக்குச் சொத்தை கோவில் பூமி எனக் குறிப்பிடாமல் சொந்த பூமியாக குறிப்பிட்டுதான் சர்வசுதந்திர பாத்தியமாக பாகம் பிரித்துள்ளார்கள் என்றால் சரிதான்.

7) பின்னர் கடந்த 02.03.1990 ல் காமாட்சி தேவர் தனக்கு பி.வா.சா.ஆ.1 படி வந்த பாகத்தை கன்னிமுத்து தேவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் மேற்படி கிரய ஆவணம் என்றால் சரிதான். (**02.03.1990 தேதியிட்ட கிரய ஆவணம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அதன்பின்னிட்டு கன்னிமுத்து தேவருக்கு வழக்குச் சொத்தில் 6.50 ஏக்கர் பாத்தியம் ஏற்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திலும் வழக்குச் சொத்தை கோவில் பூமி எனக் குறிப்பிடாமல் சொந்த பூமியாக குறிப்பிட்டுதான் சர்வசுதந்திர பாத்தியமாக கிரயம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திலுள்ள கன்னிமுத்து தேவர்தான் என் தந்தை என்றால் சரிதான்.

8) அதன் பின்னிட்டு கடந்த 15.07.1996 ல் நானும் என் தந்தை கன்னிமுத்து தேவரும் வழக்கு சொத்தைப் பொருத்து ஒரு பாகப் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அந்த பாகப்பத்திரம் என்றால் சரிதான். (**15.07.1996 தேதியிட்ட பாகப்பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்கு கோவில் சொத்துகள் என் தந்தை காலத்திற்குப் பிறகு எனக்கு பூர்ண பாத்தியப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்திலும் வழக்குச் சொத்தை கோவில் பூமி எனக் குறிப்பிடாமல் மறைத்து சொந்த பூமியாக குறிப்பிட்டுதான் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் எனக்கு அப்போது தெரியாது. பி.வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தும்போது நானும்தான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை படித்து

பார்த்துதான் கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்று பி.வா.சா.ஆ.3 விவரம் தெரிந்தே கையொப்பம் இட்டேன் என்றும் ஆனால் தற்போது அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9) என் தந்தை கன்னிமுத்து தேவர் இறந்ததேதி 13.03.2004 என்றால் சரிதான். கடந்த 11.02.2014 அன்று வழக்கு கோவில் சொத்தை நான் சுப்பிரமணியன் என்பவரிடம் அடமானம் வைத்தேன் என்றால் சரிதான். கோவில் செலவுக்கு பணம் இல்லாததால் நான் அடமானம் வைத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் மேற்படி அடமான ஆவணம் என்றால் சரிதான். (**11.02.2014 தேதியிட்ட அடமானப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் எங்கும் கோவில் செலவுக்கு பணம் இல்லாததால் நான் அடமானம் வைத்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். என் முன்னோர்கள் ஆவணப்படி நான் வழக்கு கோவில் சொத்தை அடமானம் போன்ற வில்லங்கத்திற்கு உட்படுத்தியிருக்கக் கூடாது என்றால் சரிதான். வருமானம் இல்லாததால் அவ்வாறு செய்தேன். அவ்வாறு வில்லங்கப்படுத்துவதற்கு நான் எந்த நீதிமன்ற ஆணையும் பெறவில்லை என்றால் சரிதான்.

10) வழக்கு கோவில் சொத்துக்கு கோவில் பெயரில் பட்டா பெறாமல் என் பெயரில் தான் பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரிதான். என் தாத்தா காலத்திலிருந்து எங்கள் பெயரில்தான் இருந்து வருகிறது. நானும் என் முன்னோரும் வழக்கு கோவில் சொத்தை கோவிலுக்கு சொந்தமானது என்பதை மறைத்து எங்களுக்கு சொந்தமானது போல்தான் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களை ஏற்படுத்தியிருக்கிறோம் என்றால் ஆவணங்கள் கோவில் சொத்து என குறிப்பிடவில்லை. ஆனால் வருமானத்தை கோவிலுக்குதான் பயன்படுத்தி வருகிறோம். மேற்சொன்னவாறு ஆவணங்களில் கோவில் சொத்து எனக் குறிப்பிடாமல்

அதனை அரசிடமிருந்தும் இந்து அறநிலையத் துறையிடமிருந்தும் மறைத்து வருகிறோம் என்றால் சரியல்ல.

11) வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள் சுப்பையதேவர் என்பவருக்கும் சுப்பைய கவுண்டர் மற்றும் சென்னியப்ப கவுண்டர் ஆகியோருக்கு இடையிலான வழக்கு மற்றும் மேல்முறையீடு தீர்ப்புகள் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள் வழக்குச் சொத்தும் இவ்வழக்கில் கோரியுள்ள வழக்கு கோவில் சொத்தும் ஒன்று என்றால் சரிதான். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள்படி வழக்கு சொத்துகளை கோவில் சொத்துகளாக வைக்காமல் அதனை மறைத்து இந்நாளில் எங்கள் சொந்த சொத்துகளாக ஆவணங்கள் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் ஆவணங்களில் எழுதியுள்ளது எனக்குத் தெரியாது. நான் கோவிலுக்காகத்தான் அச்சொத்தை பயன்படுத்தி வருகிறேன்.

12) என்னிடம் காட்டப்படும் அருள்மிகு காமாட்சியம்மன் மெய்யம்மன் கோவில் வரவு செலவு கணக்கு பதிவேட்டில் 17 ம் பக்கத்தில் உள்ள 4 வது கையெழுத்து என்னுடையதுதான் என்றால் (**சாட்சி முதலில் ஆவணத்தை பார்த்து அந்த கையொப்பம் தன்னுடைய கையொப்பம் என ஒப்புக் கொண்டார். ஆனால் அதன் பிறகு வாதி தரப்பு வழக்கறிஞர் ஆவணத்தைப் பார்த்துவிட்டு சரியாக கூறுங்கள் என கூறியபிறகு பின்னர் சாட்சி அந்த கையொப்பம் தன்னுடைய கையொப்பம் இல்லை என மறுக்கிறார்) (அருள்மிகு காமாட்சியம்மன் மெய்யம்மன் கோவில் வரவு செலவு கணக்கு பதிவேடு பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் பக்கம் எண்.3 ல் முதல் பதிவாக 1ம் பிரதிவாதி விஸ்வநாதன் ரூ.501 ஐ மாங்கல்ய வரியாக கொடுத்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் பக்கம் எண்.3 ல் 3 ம் பதிவாக 2 ம் பிரதிவாதி லோகநாதன்

ரூ.501ஐ மாங்கல்ய வரியாக கொடுத்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் பக்கம் எண்.3 ல் 21ம் பதிவாக 3ம் பிரதிவாதி சிவசுப்பிரமணியம் ரூ.501ஐ மாங்கல்ய வரியாக கொடுத்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் பக்கம் எண்.3 ல் 17ம் பதிவாக 4ம் பிரதிவாதி முத்துசாமி ரூ.501ஐ மாங்கல்ய வரியாக கொடுத்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் பக்கம் எண்.3 ல் 16ம் பதிவாக 5ம் பிரதிவாதி நடராஜ் ரூ.501ஐ மாங்கல்ய வரியாக கொடுத்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் பக்கம் எண்.3 ல் 6ம் பதிவாக 6ம் பிரதிவாதி தேவராஜ் ரூ.501ஐ மாங்கல்ய வரியாக கொடுத்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13) பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் பக்கம் எண்.5 ல் வரவாக ரூ.24,370/- காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் பக்கம் எண்.11 ல் செலவாக ரூ.29,466/- காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே பக்கத்தில் செலவு வகையில் 5096 ரூபாய் அதிகம் செலவானது என்றும் 1ம் பிரதிவாதி விஸ்வநாதன் 5096 ரூபாயை மட்டும் கொடுத்து பற்றாக்குறை சமன் செய்யப்பட்டது என்றும் குறிப்பு உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் கோவிலுக்கு பாத்தியப்பட்ட பூமியில் இருந்த வரவு என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பதிவேட்டில் குறிப்புகள் உள்ளது. பி.வா.சா.ஆ.5 பதிவேட்டில் நான் கையொப்பமிட்டுவிட்டு தற்போது இல்லை என வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்குரையில் பரிகாரம் திருத்தம் செய்யப்பட்டபிறகு எழுவினாக்கள் மாற்றி அமைக்கப்படவில்லை என சமர்ப்பிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு**

**எழுவினாக்கள் தொடர்பாக தெளிவு பெற வேண்டி குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

**ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி